பதிவெண் எம்.

©
தமிழ்நாடு அரசு
2002

# நாகப்பட்டினம் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

நாகப்பட்டினம், ஜூன் 10, 2002 [ எண் 20
வைகாசி 27, சித்ரபானு, திருவள்ளுவர் ஆண்டு—2033

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை.

### குடிநீர் விநியோக உப விதிகளுக்கு திருத்தம்.

மயிலாடுதுறை நகராட்சி

[1920 ம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (திருத்தி அமைக்கப்பட்டவை) பிரிவு 310 (2) ன் கீழ் பிரகாரம்.]

(ந.க. 5683/96/இ2, 21—5—2002)

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் , 309 வது பிரிவின் கீழ் மேற்படி சட்டம்130,131,132,306,(3),(டி) (இ) (எப்) (எச்) உட்பிரிவில் குறிப்பிட்ட பகுதியின் படி செய்யப்பட்டிருக்கும்,குடிநீர் விநியோக உபவிதிகளுக்கு திருத்தங்கள் செய்ய இந்நகர்மன்றம் 2000ம் ஆண்டு ஆகஸ்டு முப்பதாம் நாளிட்ட 181 வது எண் தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்டு ,மேற்படி திருத்தங்கள் பற்றி ஏதேனும் ஆட்சேபனைகளோ ,ஆலோசனைகளோ இருக்குமேயானால் தெரியப்படுத்தும் படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 309 வது பிரிவின் கீழ் தினத்தந்தி நாளிதழில் 2001ம் ஆண்டு மே திங்கள் இருபத்தி ஒன்றாம் நாளில் செய்யப்பட்ட விளம்பரத்தின் மீது பெறப்பட்ட ஒரேயொரு ஆட்சேபனையை இந் நகர்மன்றம் பரிசீலித்து , வரைவு துணை விதிகளை 2001ம் ஆண்டு ஜூலை திங்கள் இருபத்தி ஒன்பதாம் நாள் 94 வது எண்ணிட்ட தீர்மானத்திலும் ஏற்று கொள்ளப்பட்டு .அதனை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு இவ் அலுவலக கடித எண் 5683 / 96 இ2 2001 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28 ம் நாள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்பட்டதை நகராட்சி நிர்வாக ஆணையர்.சென்னை அவர்கள் அவரது 2001ம் ஆண்டு நவம்பர் திங்கள் முப்பதாம் நாளிட்ட ந.க.64915/99/குவ2 செயல்முறை ஆணையில் உபவிதிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார் .எனவே தற்போது பொது மக்கள் தகவலுக்காக தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 310 (2)ன் கீழ் விளம்பரபடுத்தபடுகிறது. மேற்படி திருத்தம் செய்யப்பட்ட உப விதிகள் ,இப்பிரகாரம் செய்யப்பட்ட நாளிலிருந்து ,மூன்று திங்களுக்கு பின் ,அமுலுக்கு கொண்டு வரப்படும்.

| வ. எண் | தற்போதுள்ள குடிநீர் விநியோக உபவிதிகள் | குடிநீர் உபயோக உபவிதிகள் திருத்தப்பட்டது. |
|---|---|---|
| 1 (எ) | பதிவுக்கட்டணம் ரூ,20/- மதிப்பீடுகள் வரை படங்கள் முதலியன தயாரிக்கும் செலவுக்காக ரூ ,30/- செலுத்திடவேண்டும். | பதிவுக்கட்டணம் ரூ,50/- மதிப்பீடுகள் வரைபடங்கள் முதலியன தயாரிக்கும் செலவுக்காக ரூ,100/- செலுத்திட வேண்டும். |
| 2 | வீட்டின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவர் வீட்டு செலவுக்கு தவிர தண்ணீர் பிற வகையில் செலவிட்டாலும் வீணாக்கினாலும் ஆணையர் சொல்கிறபடி தம் சொந்த செலவில் அளவுக்கருவியை வைத்துக்கொள்ள ஆணையிடலாம் . | இந்நகராட்சியில் வீட்டுபயனுக்காக இணைக்கப்படும் எல்லா இணைப்பு குழாய்களும் அளவு கருவியை (மீட்டர் ) வைத்தே இணைப்பு வழங்கப்படும் குழாய் இணைப்பில் உள்ள இணைப்புகளுக்கும் அளவு கருவி (மீட்டர்) வைத்த இணைப்பாக மாற்றம் செய்யப்படுகிறது. |
| 3அ | குறிப்பிட்ட சில இனங்களுக்கு மட்டுமே அளவு கருவி முறைப்படி தண்ணீர் வழங்கப்படும் . | அனைத்துவகையான இணைப்புகளுக்கும் அளவு கருவி வைத்து இணைப்பு வழங்கப்படும். அளவு கருவி மூலமே கட்டணம் தண்டப்படும் . |
| 3ஆ | சந்தைகடைகள் , துப்புரவு நிலையங்களுக்கு வீட்டு பயன்பாட்டுக்கு அல்லாத செயல்களுக்கு 9 (ஏ) ல் கண்டவாறு வரி தண்டப்படும் . | 11(அ)ல் கண்டவாறு வரி வசூலிக்கப் படும். |
| 4 | Stop cock (ஸ்குருடவுன் பெருவி) அமைக்கப்படவேண்டும் . | Flow control valve அமைக்கப்படவேண்டும். |
| 5 | ஒரே வளைவுக்குள் பல வீடுகள் கட்டப்பட்டிருக்குமேயானால் வீடுகள் எண்ணிக்கை குழாய்களின் எண்ணிக்கையைவிட கூடதலாக இருக்குமேயானால் கூடுதலாக உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.5/- கூடுதலாக தண்டப்படும். | வீடுகள் எண்ணிக்கை குழாய் எண்ணிக்கையைவிட கூடுதலாக இருக்குமேயானால் கூடுதலாக உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியே இணைப்புகள் பெறப்படவேண்டும் . தனித் தனி இணைப்பு பெறப்படாவிட்டால் அங்குள்ள இணைப்புகளுக்கு வணிக தொடர்புடைய காரியங்களுக்கு செலுத்தும் தொகை வசூல் செய்யப்படும். |
| 7எ | அளவைப்பொறி முறையானாலும் குழாய் வீதமானாலும், காம்பின் அளவு 15 மி.மீ , (1/2) மேற்படகூடாது. | -- |
| பி | தண்ணீர் வழங்குவது நிறுத்தப்படும். | தண்ணீர் வழங்குவது உடனடியாக நிறுத்தப்படும். |
| 8எ | 3(எ)ல் கூறியுள்ளவை நீங்கலாக வீட்டு காரியங்களுக்கு மாத்திரம் தண்ணீரை பயன்படுத்துகிறவர் அவர் விருப்பப்படி குழாய் வீதத்திலோ , அளவுப்பொறியபடி பணம் செலுத்தலாம். | அளவு கருவி வீதத்தின் படியே பணம் செலுத்தலாம். |
| 8பி II | அளவைப் பொறிக்கு மாதம் 1க்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.1.50 பைசா வீதம் செலுத்தவேண்டும், வீட்டு சொந்தக்காரர் (அ) குடியிருப்பவரால் அளவு பொறி வைக்கப்பட்டிருந்தால் பராமரிப்பிற்காக மாதம் ஒன்றுக்கு 50 பைசா வசூலிக்கப்படும். | ரூ.15/- வீதம் செலுத்தவேண்டும். அளவை பொறி வீட்டு சொந்தக்காரர் (அ) குடியிருப்பவரால் வழங்கப்பட்டுள்ளதால் பராமரிப்பதற்காக ரூ.15/- வீதம் வசூலிக்கப்படும். |
| சி) | அளவை பொறியை அகற்றி குழாய் வீதத்தில் மாற்றி கொள்ள விரும்பினால் ஆணையர் குறிக்கும் தொகையை செலுத்தி விட வேண்டும் | அளவைபொறியை அகற்றுவதற்கும்,மாற்றியமைப்பதற்கும் வீட்டின் சொந்தகாரர் விரும்பினால் ஆணையர் அனுமதி பெறலாம். |

| | | |
|---|---|---|
| 8(ஐ) | குழாய் வீதக்கிற்கு மாற்றியமைக்க விரும்பினால் ரூ,10/. ம் அம்மாறுதல் செய்வதற்கான செலவு தொகையும் நகராட்சியில் செலுத்தவேண்டும். | அளவைபொறி அடிப்படையில் இணைப்பு பெற்ற பின்பு எக்காரணம் முன்னிட்டும் வேறு வகையான காரணங்களுக்கு மாற்றியமைக்க முடியாது. |
| 9(எ) | கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.20/- குறையாமல் 1000 லீட்டருக்கு ரூ.2/- வீதம் தண்டப்படும்.<br><br>இலவசமாக வழங்கப்படும் தண்ணீர் 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.2/ வீதம் வசூலிக்கப்படும் | மாதம் ஒன்றுக்கு ரூ.50/- க்கு குறையாமல் 1000 லிட்டருக்கு ரூ.5/- வீதம் வசூலிக்கப்படும்.<br><br>1000 ம் லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ . 5/- வீதம் வசூலிக்கப்படும். |
| பி | வீட்டு பயனுக்கு ஒரு குழாய்க்கு ஒரு மாதத்திற்கு அல்லது பாகத்திற்கு ரூ.20/க்கு குறையாமல் | வீட்டு உபயோகத்திற்கு கட்டணம்<br>ஆண்டு \| குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் (ரூ) \| கூடுதல் 1000 லி (அ) பாகத்திற்கு (ரூ)<br>2001-02 \| 50/- \| 5/-<br>2002-03 \| 55/- \| 5/-<br>2003-04 \| 60/- \| 5/-<br>2004-05 \| 65/- \| 5/-<br>2005-06 \| 70/- \| 5/-<br>2006-07 \| 75/- \| 5/-<br>2007-08 \| 80/- \| 5/-<br>2008-09 \| 85/- \| 5/-<br>2009-10 \| 90/- \| 5/- |
| 10 எ | ஒவ்வொரு மாதமும் 5 ந் தேதிக்கு முன்னரே கட்டணம் செலுத்தி விட வேண்டும். | 10 ந் தேதிக்கு முன்னரே அந்தந்த மாதத்திற்குரிய கட்டணதொகை செலுத்தி விடவேண்டும். |
| பி | அளவை பொறிமூலம் வழங்கபடும் தண்ணீருக்கான கட்டணம் 10 ம் தேதிக்குள் அனுப்பபடும் .,இந்த அறிக்கை பெற்ற 7 நாட்களுக்குள் கட்டணம் செலுத்தப்படவேண்டும். | 10 ம் தேதியிலிருந்து 15 ந் தேதி உள்ள நாட்களில் 10 ந்தேதி கட்டணத்துடன் ரூ.5-/ அபராதத்துடன் செலுத்தவேண்டும். 15 ந் தேதிக்கு பின்னர் முன்னறிவிப்புயின்றி இணைப்பு துண்டிக்கப்படும். |
| டி) | கட்டணத்தொகை குறித்த காலத்தில் செலுத்தப்படாவிட்டால் சொத்துவரி தண்டப்படும் முறையிலேயே இக்கட்டணத்தையும் தண்டப்படும். | குறித்த காலத்தில் செலுத்தப்படாவிட்டால் 15 ந் தேதிக்கு பின்னர் எந்த முன்னறிவிப்புமின்றி குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். |
| இ | மறு இணைப்பிற்கான கட்டணம் ரூ.25/- செலுத்தி அதற்கான செலவுகளையும் விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.எந்த காரணத்திலாவது மூடப்பட்ட இணைப்பை மூடப்பட்ட தேதியிலிருந்து 2 வருட தவணைக்கு மேற்பட்டு திறந்து விடுமாறு விண்ணப்பித்துக் கொள்ளும் இணைப்பை திறந்து விட முடியாது.மேலும் அந்த இணைப்பு திறந்து விடுமாறு கோரும் உரிமை ரத்தாகி விடும். | மறு இணைப்புக்கு ரூ.250/- செலுத்தி அதற்கான செலவை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும் .எந்த காரணத்தை முன்னிட்டும் மூடப்பட்ட இணைப்பை 50 தினங்களுக்கு மேற்பட்டு திறந்து விடுமாறு விண்ணப்பித்துக் கொள்ள முடியாது.30 நாட்களுக்கு மேல் மேற்படி இணைப்பு நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| 10 (எப்) | தண்ணீரை பயன்படுத்தாமல் விட்ட காலம் கால் ஆண்டுக்கு குறைந்திருந்தால் கட்டணம் தள்ளி தரப்படமாட்டாது. தண்ணீரை பயன்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி விடும்படி விண்ணப்பம் செய்திருந்தால் முழு கால ஆண்டுக்கு ஆணையரால் கட்டணம் தள்ளி தரப்படும்.<br>மீண்டும் இணைப்பு ஏற்படுத்த ரூ.25/. தண்டப்படும். மறு இணைப்பிற்கான செலவை விண்ணப்பதாரரே ஏற்றுக் கொள்ளவேண்டும். | தண்ணீரை பயன்படுத்தாமல் விட்ட காலம் 6 மாதத்திற்கு குறைந்திருந்தால் கட்டணம் தள்ளி தரப்படமாட்டாது. முன்னரே விண்ணப்பித்திருந்தால் முழு கால் ஆண்டிற்கு கட்டணம் ஆணையரால் தள்ளித் தரப்படும். மறு இணைப்பிற்கு ரூ.250/- வசூலிக்கப்படும். மறு இணைப்பிற்கான் செலவை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும். |
| 11. அ) | தொழில் தொடர்புடைய காரியங்களுக்காக ஒவ்வொரு 1000 லிட்டர் (அ) அதன் பாகத்திற்கு ரூ.4/- வீதம் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.40/- க்கு குறையாமல். | ஆண்டு — குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் (ரூ) — கூடுதல் 1000 லி (அ) பாகத்திற்கு (ரூ)<br>2001-02 — 75/ — 7.50/-<br>2002-03 — 79/- — 7.50/-<br>2003-04 — 83/- — 7.50/-<br>2004-05 — 87/- — 7.50/-<br>2005-06 — 91/- — 7.50/-<br>2006-07 — 96/- — 7.50/-<br>2007-08 — 101/- — 7.50/-<br>2008-09 — 106/- — 7.50/-<br>2009-10 — 111/- — 7.50/- |
| | வியாபார காரியங்களுக்கு ஒவ்வொரு 1000 லிட்டர்கள் அல்லது அதன் பாகத்திற்கு ரூ.6/- வீதம் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.60/-க்கு குறையாமல். | ஆண்டு — குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் (ரூ) — கூடுதல் 1000 லி (அ) பாகத்திற்கு (ரூ)<br>2001-02 — 100/- — 10/-<br>2002-03 — 105/- — 10/-<br>2003-04 — 110/- — 10/-<br>2004-05 — 116/- — 10/-<br>2005-06 — 122/- — 10/-<br>2006-07 — 128/- — 10/-<br>2007-08 — 134/- — 10/-<br>2008-09 — 141/- — 10/-<br>2009-10 — 148/- — 10/-<br><br>ஒவ்வொரு 1000 லிட்டர்கள் அல்லது அதன் பாகத்திற்கு ரூ.10/- வீதமாக குறைந்தபட்சம் ரூ.100 /- வசூலிக்கப்படும். |
| 12ஏ | அளவைபொறி பற்றிய குறைகளை ரூ.5/- பொறுப்புத்தொகை செலுத்தி விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும் | ரூ.25/- பொறுப்புத் தொகை செலுத்த விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். |
| 13 | அளவைப் பொறி காட்டும் கணக்கு தவறு என்று தெரியவந்தாலும் அல்லது ஒரு மாதத்திற்கு மேல் பழுதாய் இருந்தாலும் ஆணையர் பெரிதும் தகுதியானதென்று கருதும் கணக்கை கொண்டாவது தீர்வை விதிக்கப்படும். | இது பற்றி ஆணையரின் முடிவே இறுதியானதாகும். |
| 14 | திருமணத்திற்கோ, பிற தேவைக்கோ தற்காலிகமாக தண்ணீர் வழங்குவதற்காக செலவு ரூ.50/-ம் நாள் ஒன்றுக்கு இணைப்பு ஒன்றுக்கு ரூ.10/- வீதமும் தண்டப்படும். | தற்காலிகமாக இணைப்பு வழங்குவதற்கான செலவு ரூ.300/.ம் நாள் ஒன்றுக்கு இணைப்பு ஒன்றுக்கு ரூ.50/-வீதமும் தண்டப்படும். |

| | | |
|---|---|---|
| 15 | குழாய் வீதத்திலோ, அல்லது அளவைபொறிப்படியோ தண்ணீர் வழங்குவதால் (குறை). | அளவைபொறி முறை மட்டுமே. |
| 16 | நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட இணைப்பு குழாய்க்கு ஹோஸ்பைப் பொருத்தி | ரப்பர் குழாய் பொருத்தி |
| 17 | சென்னை பொது சுகாதார பொறியியல் பிரிவு மேற்பார்வை பொறியர் | சென்னை பொது நகராட்சிகளின் நிர்வாக ஆணையர். |
| 20 | ஆணையரைக்கொண்டு | நகராட்சி பொறியரின் மேற்பார்வையில் |
| 22(டி) | இந்த வழிச்சட்டம் | இந்த துணை விதிகள் |
| எல்) | வழிச்சட்டங்கள் | முந்தைய வழிச்சட்டங்கள் |
| 23 | வீட்டுப்பயனுக்கல்லா காரியங்களுக்கு | வீட்டுப்பயனுக்கல்லாத எந்த காரியங்களுக்கும். |
| | 50 ரூபாய் தண்டனையும் மீறினால் நாள் ஒன்றுக்கு ரூ.15/- தண்டனையாவது அல்லது மீறி நடப்பதை நிறுத்த வேண்டும் என்று அறிவிப்பு கிடைத்த பிறகும் மீறியே நடந்து செல்லும் ஒவ்வொரு நாளைக்கும் ரூ.10/-க்கு மேற்படாமல் தண்டனை விதிக்கப்படும். | 50 ரூபாய் வரை தண்டனையும் மீறினால் நாள் ஒன்றுக்கு ரூ.100/- தண்டனையாவது அல்லது ஆணையரிடமிருந்து அறிவிப்பு கிடைத்த பிறகும் மீறயே நடந்து செல்லும் ஒவ்வொரு நாளைக்கு ரூ.100/-க்கு மேற்படாமல் தண்டனையாக விதிக்கப்படும். |
| 25 | | 1. வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ.4000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்)<br>2. தொழிற்சாலை உபயோகத்திற்கு குடிநீர் இணைப்பிற்கான வைப்புத்தொகை ரூ.8000/ (ரூபாய் எட்டாயிரம் மட்டும்)<br>3. வணிக உபயோகத்திற்கு குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ.8000/- (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) |

*மயிலாடுதுறை,*
*2002 மே 21.*

*(ஒப்பம்)————*
*நகராட்சி ஆணையர்.*

(லேசர் அச்சடிப்புகள்,நகராட்சி ஆணையர், மயிலாடுதுறை).
தமிழ்நாடு எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநரால் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.